முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (12.2.2026) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), பாரத் பயோடெக் நிறுவனம், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்க உள்ள உயிரியல் மற்றும் மருந்துகள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஒம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாகுடோ ஐவானகா, B.I.G. Tech நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ராஜு பாண்டியன், நார் பிரெம்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மார்கஸ் பெர், பாரத் பயோ டெக் நிறுவனத்தின் செயல் தலைவர் கிருஷ்ணா எல்லா, டாபர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மோகித் மல்கோத்ரா, தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

திரு.வி.க.நகர் மண்டலத்தில் ரூ.15.88 கோடியில்

மழைநீர் வடிகால் - உடற்பயிற்சிக் கூடம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்!

சென்னை,பிப்.13- முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, நேற்று (12.02.2026) திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 15.88 கோடி மதிப்பீட்டில் மழை நீர் வடிகால், பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் உள்ளிட்ட பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர் பிரதான சாலையில் மூலதன நிதியின் கீழ், ரூபாய் 11.75 கோடி மதிப்பீட்டில் வார்டு-70ல் இராகவன் தெரு முதல் பெரம்பூர் நெடுஞ்சாலை வரை 756 மீட்டர் தூரத்திற்கும், வார்டு-71ல் பெரம்பூர் பிரதான சாலை முதல் பாரதி சாலை சந்திப்பு மற்றும் பிபி சாலை வரை 1,012 மீட்டர் தூரத்திற்கும் மற்றும் வார்டு-74ல் சுரங்கப்பாதை சந்திப்பு முதல் ஏகாங்கிவுரம் கானல் சந்திப்பு வரை 350 மீட்டர் தூரத்திற்கும் என மொத்தம் 2,118 மீட்டர் தூரத்திற்கு புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-71க்குட்பட்ட பெரம்பூர், வடிவேலு 2வது குறுக்குத் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ், ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடத்திற்கான பணி மற்றும் வார்டு-75க்குட்பட்ட ஏ.கே. சாமி நகர், 9ஆவது தெருவில் மூலதன நிதியின் கீழ், ரூபாய் 3.63 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டுமானப் பணி ஆகியவற்றை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மேயர் திருமதி ஆர். பிரியா, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி புனிதவதி எத்திராசன், திருமதி சி.ஸ்ரீதணி, திருமதி எல்.ரமணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

12 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி பெருவிழா

பிப். 15 அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப். 13- இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள 12 திருக்கோயில்கள் சார்பில் இந்தாண்டு மகாசிவராத்திரி பெருவிழா ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் 15.02.2026 அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை தொன்மை வாய்ந்த திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளோடு, திருக்கோயில்கள் சார்பில் கமலமுனி சித்தர், பாம்பாட்டி சித்தர், சுந்தரானந்த சித்தர், சிவவாக்கிய சித்தர், பதஞ்சலி சித்தர் ஆகிய சித்தர் பெருமக்களுக்கும், திருஅருட்பிரகாச வள்ளலார், தெய்வப்புலவர் சேக்கிழார், சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் (அப்பர் பெருமான்), நாலாயிர திவ்ய பிரபந்த தமிழ் மறை நூலினைத் தொகுத்தவரான ஸ்ரீமத்நாதமுனிகள் மற்றும் அவரது பெயரன் ஆளவந்தார் ஆச்சாரியார், 63 நாயன்மார்களில் நந்தனார், காரைக்கால் அம்மையார் போன்ற அருளாளர்களுக்கும் விழா எடுத்தும் சிறப்பு செய்து வருகிறது. மேலும், கடந்தாண்டு 9திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி பெருவிழாவும், கடந்த 3 ஆண்டுகளாக சென்னை, மயிலாப்பூரில் நவராத்திரி பெருவிழாவும் பக்தர்கள் பங்கேற்புடன் விமரிசையாகநடத்தப்பட்டு வருகிறது.

ஆடல் வல்லான் சிவபெருமானின் அருளாற்றலையும், பெருமையையும் பறைசாற்றும் வகையிலும், சிவ வழிபாடு செய்ய வரும் பக்தர்களின் மனம் மகிழும்படி கடந்த 02.03.2022 அன்று மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கொண்டாடப்பட்ட மகாசிவராத்திரி பெருவிழா இறையன்பர்கள் மற்றும் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பு பெற்றதைத் தொடர்ந்து, திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயில், தஞ்சாவூர், பிரகதீஸ்வரர் திருக்கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், பேரூர், பட்டீசுவரர் திருக்கோயில், மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், திருவாரூர், தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம், திருவாலங் காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில், ஆகிய 9 திருக்கோயில்களின் சார்பில் மகாசிவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

2025-2026 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின் படி, "9திருக்கோயில்களின் சார்பாக மகாசிவராத்திரி விழா வெகு சிறப்பாக நடத்தப்பட்டு பக்தர்களின் அமோக வரவேற்பினை பெற்றதனைத் தொடர்ந்து, இவ்வாண்டு கூடுதலாக, இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயில், கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம், விருத்தகிரீசுவரர் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேசுவரம் நாகநாதசுவாமி திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி விழா நடத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில் இராமேசுவரம், இராமநாதசுவாமி திருக்கோயில், விருத்தாச்சலம், விருத்தகிரீசுவரர் திருக்கோயில், திருநாகேசுவரம் நாகநாதசுவாமி திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களுடன் ஏற்கனவே மகாசிவராத்திரி விழா நடத்தப்பட்டு வரும் 9 திருக்கோயில்களையும் சேர்த்து மொத்தம் 12 திருக்கோயில்கள் சார்பில் 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி முதல் 16.02.2026 திங்கட்கிழமை காலை 6.00 மணி வரை மகாசிவராத்திரி பெருவிழா ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

கிராமப்புற பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாய் இருக்கும்

நபார்டு வங்கிக்கு வருமான வரி விலக்கு வழங்க வேண்டும்!

மாநிலங்களவையில் – கேஆர்.என்.இராஜேஸ்குமார் வலியுறுத்தல்!

நாமக்கல், பிப்.13 - டெல்லியில் மாநிலங்களவை கூட்டத் தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஷ்குமார் கலந்து கொண்டு நேரமில்லா நேரத்தில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) மீது விதிக்கப்பட்டுள்ள அனைத்து வரிகளையும் உடனடியாக நீக்கி, அதன் நிதி சுயாதீனத்தையும் செயல்திறனையும் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்..

மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தின் போது பேசிய கே.ஆர்.என். இராஜேஷ் குமார்.. "NABARD நாட்டின் ஊரக பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது. வேளாண் கடன், ஊரக உட்கட்டமைப்பு மேம்பாடு, விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குவதில் NABARD மிக முக்கியப் பங்காற்றி வருகிறது. நாட்டின் செல்வத்தின் அடித்தளமாக இருக்கும் ஊரக வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் உண்மையான Mother Bird தாய் பறவையாக NABARD திகழ்கிறது".

NABARD தற்போது செயல்பட்டு வரும் நிதி கட்டமைப்பு, அதன் நோக்கங்களை முழுமையாக நிறைவேற்ற தடையாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். NABARD மீது விதிக்கப் படும் வரிகள், ஊரக மக்களின் நலனுக்காக நேரடியாக செலவிடப்பட வேண்டிய வளங்களை குறைத்து வருவதாக கூறிய அவர், "எனவே NABARD மீது விதிக்கப்பட்டுள்ள வருவமான வரிகளை அரசு உடனடியாக நீக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

மேலும், NABARD நிர்வகிக்கும் **ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF)**க்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை வைத்தார். "ஊரக உட்கட்டமைப்பு, பாசன வசதிகள், சந்தை அணுகல் போன்றவற்றிற்கு RIDF மிகவும் அவசியமானதாக இருந்தாலும், தற்போதைய ஒதுக்கீடு போதுமானதாக இல்லை" என்றார்.

RIDF நிதி முழுமையாக வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

MSME, HUDCO, SIDBI போன்ற அமைப்புகள் முக்கியமானவை என்றாலும், அவற்றுக்கான நிதியுதவி NABARD இன் வளங்களை பாதிக்கும் வகையில் இருக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி - தனிநபர் வருமானம் உயர்வு ஆகியவையே

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியின் பொருளாதார வளர்ச்சிக்கு சான்று!

இந்தியாவை அமெரிக்காவுக்கு ஒன்றிய அரசு விற்று விட்டது - மாநிலங்களவையில் இரா. கிரிராஜன் பேச்சு!

புதுடெல்லி, பிப்.13- மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி, தனிநபர் வருமானம் ஆகியவை உயர்ந்துள்ளதே திராவிட மாடல் அரசாங்கத்தின் கீழ், முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் தலைமையிலான பொருளாதார வளர்ச்சிக்கு சான்றாகும் என்றும், இந்தியாவை அமெரிக்காவிற்கு ஒன்றிய அரசாங்கம் விற்றுவிட்டதாகவும் நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் இரா. கிரிராஜன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

2026-27-ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் பட்ஜெட் மீதான விவாதத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் திமுக எம்.பி. இரா.கிரிராஜன் உரையாற்றினார். அப்போது, நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் ஒன்பது முறை பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ள நிலையில், வழக்கமாக பட்ஜெட்டுக்கு முன்பாக திருக்குறள் இடம்பெறும் நிலையில், கடந்த ஆண்டு பட்ஜெட்டிலும் திருக்குறள் இடம்பெறவில்லை என்றும், அதேபோல தமிழ்நாட்டுக்குக்கான திட்டங்களும் இல்லை, ஒதுக்கப்பட வேண்டிய தொகையும் முறையாக ஒதுக்கப்படவில்லை என தனது உரையை தொடங்கினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:-

திருக்குறள் குறிப்பிடாமல் தெலுங்கில் உள்ள கவிதையை குறிப்பிட்ட நிதி அமைச்சர், அதில் தேசமென்பது மண் அல்ல, மக்களை கொண்டது தான் தேசம் என பொருள்படும் நிலையில், இந்த ஆண்டுக்கான பட்ஜெட் மக்களுக்கான பட்ஜெட்டோ, நாட்டிற்கான பட்ஜெட்டோ இல்லை என்றும், மாறாக முற்றிலும் அமெரிக்காவிற்கான பட்ஜெட் என்றும், இந்த ஒன்றிய அரசாங்கம் இந்தியாவை அமெரிக்காவிற்கு விற்றுவிட்டது. வர்த்தக ஒப்பந்தம் மூலம் இந்தியாவை விற்றுவிட்டதாக குறிப்பிட்டார். வர்த்தக ஒப்பந்தம் அல்லது பாதுகாப்பு விசயம் அல்லது வேறு எந்த பிரச்சினைகளாக இருந்தாலும், சமீப காலங்களில் அது அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பால் முறையாக அறிவிக்கிறார்.

சுயமரியாதையை இழந்து வருகிறது!

இந்தியா குறித்து அமெரிக்க ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்பை மறுக்க ஒன்றிய அரசுக்கு எந்த தைரியமும் இல்லை. அதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. இந்தியாவுக்கான பட்ஜெட்டிலும் இதே நிலை ஏற்பட்டால், அமெரிக்கா முன் இந்தியா சரணடைந்துவிட்டதாகவே மக்களின் மனதில் ஓர் அச்சம் உள்ளது. நாட்டின் சுயமரியாதையையும், இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் இந்தியா இழந்து வருகிறது.

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையைக் காட்டி வருவதால் தான், எந்த சிறப்புத் திட்டமோ அல்லது நிதி ஒதுக்கப்படவில்லை.

2004 முதல் 2014 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டுக்காக 16 பெரிய திட்டங்களை வழங்கிய நிலையில், அப்போது செயல்படுத்தப்பட்ட சேது சமுத்திரம் திட்டம் போன்ற மதிப்புமிக்க திட்டங்களை அரசியல் காரணங்களுக்காக ஒன்றிய அரசு கிடப்பில் போடப்பட்டுள்ளது.

வரி வருவாயிலிருந்து மாநிலங்களுக்கு கொடுக்கக்கூடிய பங்கை 50 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சரும், திராவிட மாடல் தலைவருமான மு.க.ஸ்டாலின் பல முறை வலியுறுத்தியும், ஒன்றிய அரசின் காதில் விழவே இல்லை. அதன் வெளிப்பாடாகவே இந்த பட்ஜெட்டிலும் 41 சதவீதத்தை மட்டுமே ஒதுக்கியுள்ளது.

செஸ் வரி உள்ளிட்ட வரிகளை மாநில அரசுகளுடன் பங்கிடாத ஒன்றிய அரசின் நடைமுறை ஒழிக்கப்பட வேண்டும் அல்லது பகிர்ந்தளிக்கக்கூடிய தொகுப்பின் கீழ் கொண்டு வர வேண்டும்.

ஒதுக்க வேண்டிய நிதி ரூ. 3,112 கோடி ஒதுக்கவில்லை!

ஒன்றிய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்நாட்டின் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மெட்ரோ ரயில் திட்டங்கள் அரசால் அங்கீகரிக்கப்படவில்லை. அதே சமயம், ஆக்ரா, புவனேஸ்வர், நவி மும்பை, இந்தூர் போன்ற நகரங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தங்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். அதேபோல, ஜல் ஜீவன் மிஷனின் கீழ், இதுவரை 3,112 கோடி ரூபாய் தமிழ்நாட்டுக்கு விடுவிக்கப்படவில்லை.

முந்தைய பட்ஜெட்டுகளில் அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை முடிக்க தேவையான நிதி இதுவரை விடுவிக்கப்படவில்லை. அதன்படி 931 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்துவதற்கான நிதி வழங்கப்படவில்லை. நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம்தான் நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்கள் முடிக்கப்படாததற்குக் காரணம் என்று ரயில்வே அமைச்சர் நம்பிக்கொண்டிருக்கிறார்.

இதுபோன்ற கூட்டாட்சி எதிர்ப்பு மனப்பான்மை மற்றும் சுரண்டலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். பிரதமர் நரேந்திர மோடி அளித்த ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்புகள், ஒரு குடும்பத்திற்கு ரூ. 15 லட்சம் கொடுக்கப்படும், விவசாயப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனின் பரிந்துரை ஆகிய வாக்குறுதிகள் என்ன ஆனது.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி!

தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி 16 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ரூ. 3.28 லட்சமாக உள்ளது என்றும் குறிப்பிட்ட அவர், இது தேசிய சராசரியான ரூ. 1.96 லட்சத்தை விட கிட்டத்தட்ட 60 சதவீதம் அதிகம் என்பதை சுட்டிக்காட்டி, இது திராவிட மாடல் அரசாங்கத்தின் கீழ், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் துடிப்பான தலைமையிலான குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சான்றாகும்.. இதன்மூலம் தொழில்கள் மற்றும் பிற சேவைத் துறைகளில் தமிழ்நாட்டின் முக்கிய பங்களிப்புகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் இருக்கிறது.

விக்சித் பாரத்-தின் தொலைநோக்கு பார்வையை மாநிலங்களுடனான உண்மையான கூட்டாண்மை மூலம் மட்டுமே உணர முடியும். மாநிலங்களுடனான கூட்டாண்மை என்பது அவற்றின் பன்முகத்தன்மை, சுயாட்சி, அரசியலமைப்பு பங்கை மதித்து.செயல்படுதே ஆகும் . தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதை, அரசியலமைப்பு விழுமியங்களுடன் இணைந்த மாநில அளவிலான நிர்வாக முடிவுகளைத் தருகிறது என்பதை நிரூபிக்கிறது.

உரிமைக்கு குரல் கொடுப்போம், உறவிற்கு கை கொடுப்போம் எனும் திமுக-வின் கொள்கை என்பது உரிமைகளுக்காக குரல் எழுப்புவோம்., தேசிய நலனுக்காக நட்புறவுக்காக நாம் நமது கரங்களை நீட்டுவோம் என்பதையும் இங்கே குறிப்பிடுகிறார்.

தேசிய நலனைப் பொறுத்தவரை திமுக எப்போதும் முதலில் முன்னணியில் இருந்து வழிநடத்தும், மாநில கூட்டாட்சி உரிமைகளைப் பொறுத்தவரை, நமது தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக முதலில் குரல் எழுப்புவதும் திமுக தான்.

இவ்வாறு மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் பேசினார்.